செய்தி வெளியீடு எண்– 491 நாள்- 6.8.2007

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில்
## ரூ.2300 கோடியில் உலக தரத்தில் புதிய தொழில் மையம்

## முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில்
## புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழகத்தின் வடமாவட்டங்களில் குறிப்பாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் வாய்ப்புகளை முடுக்கிவிடும் நோக்கத்திலும், பெரிய அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையிலும் பல்வகைப் பொருள்களின் உற்பத்திக்காக உலகத் தரத்திலான கட்டமைப்பு வசதிகள் கொண்ட தொழில் மையம் ஒன்றினை டிட்கோ நிறுவனம் புதிதாக அமைக்கிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 1330 எக்டேர் பரப்பில் அமையும் இத்திட்டத்திற்காக மத்திய அரசு ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. சென்னையையும், பெங்களூரையும் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலை ஆகியவற்றின் அருகில் இத்தொழில் மையம் அமைகிறது. உலகத் தரத்தில் கட்டமைப்பு வசதிகள், பசுமைசூழ் சாலைகள் (Green Corridors), உயர்தர சமூகக் கட்டமைப்பு வசதிகள், சுற்றுச்சூழல் பாதுகாப்புகள் ஆகியவற்றுடன் இத்தொழில் மையம் வடிவமைக்கப்படவுள்ளது.

ஏற்றுமதியை ஊக்குவிக்கும் மின்னணுத் தொழில்கள், ஆடை உற்பத்தித் தொழில்கள் பொறியியல் தொழில்கள், தகவல் தொழில்நுட்ப மற்றும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த தொழில்கள் உயிரி தொழில்நுட்பம் மற்றும் நானோ தொழில்நுட்பம் சார்ந்த அறிவுசார் தொழில்கள் ஆகியவை இம்மையத்தில் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏறத்தாழ 2300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவிருக்கும் இத்தொழில்மையம் ஏறத்தாழ 11 ஆயிரம் கோடி ரூபாய் அளவில் முதலீடுகளை ஈர்க்கும்; இங்கு ஆண்டுக்கு 16 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் அமையும்; ஏறத்தாழ 70,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளை வழங்கும்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக திருவாளர்கள் ஜிஎம்ஆர் குழும நிறுவனம் சர்வதேச அளவிலான போட்டி ஏலத்தின் மூலம் டிட்கோவின் கூட்டுத்துறை பங்குதாரராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. டிட்கோவும் ஜிஎம்ஆர் நிறுவனமும் இணைந்து கூட்டுத்துறை நிறுவனம் ஒன்றை உருவாக்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில், இன்று (6.8.2007) இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. டிட்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. எஸ். இராமசுந்தரம், இஆப., ஜிஎம்ஆர் கூட்டமைப்பு நிறுவன இயக்குநர் திரு.பி.வி. நாகேஸ்வரராவ் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். மின்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா.வீராசாமி, தலைமைச் செயலாளர், திரு. எல்.கே. திரிபாதி, இஆப., நிதித் துறைச் செயலாளர் திரு கு.ஞானதேசிகன்,இஆப., தொழில்துறைச் செயலாளர் திரு. சக்திகாந்ததாஸ், இஆப., ஜிஎம்ஆர் குழுமத்தின் தலைவர் திரு. ஜி.மல்லிகார்ஜுனராவ் ஆகியோர் உடனிருந்தனர்.

***

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, செ–9.